# கட்டடப்பொருளியலாளன்

இதழ் - 18




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Unistruct Consulting Engineers (Pvt) Ltd.



*Point where quality and dreams meet with satisfaction*

கட்டட திட்டமிடல், வடிவமைப்பு, கட்டுமான சேவைகள்

## Key Offerings

- Architectural Design
- Structural design
- Authority Submission and approval
- Chartered Engineer's Certification
- Cost planning
- 3D Drawings and images
- Construction Management and Supervising Construction
- Quantity Surveying

## Key Personal

**Eng. Mahesh Gamage**
*Chartered Engineer*
*B.Sc.Eng.(Hons), PG Dip.(Const.Mgmt)*
*CEng.MIE(SL),GREENSL®AP*
*MSStructEng., MSLGS*

**Eng. Ayingaran T**
*Chartered Engineer Sri Lanka*
*Chartered Engineer UK,*
*MIStrctE, MIES, AMIE(SL)*
*B.Sc (Eng) (Hons), M.Sc (Singapore)*



### Past Projects (Sri Lanka)

- *4 Storey Commercial Building, Batticoloa*
- *3 Storey Commercial Building for Commercial Bank Point Pedro*
- *26 Story Hotel Building at Colombo -3*
- *6 Storey residential Building at colombo-6*
- *8 Storey Steel Building at Dehiwala*
- *2 Storey Modern House at Suthumalai*

No. 307, Jaffna-Manipay Road Manipay, Jaffna
*Tp :- 0214546577, 021-2256448*
*admin@unistruct.lk*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கட்டடப்பொருளியலாளன்

# 2016

இளம் கட்டடப் பொருளியலாளர்

இணைப்புப்பாலம்

## இதழ் - 18

**நம் அடையாளங்களை அறிவோம்**

**அவற்றை அடுத்த சந்ததிக்கு கொண்டுசேர்ப்போம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டடப்பொருளியலாளன்

# 2016

இளம் கட்டடப் பொருளியலாளர்

இணைப்புப்பாலம்

## இதழ் - 18

**நம் அடையாளங்களை அறிவோம்**

**அவற்றை அடுத்த சந்ததிக்கு கொண்டுசேர்ப்போம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் யோகசிங்கம்
சத்தியேந்திரா



அமரர் தங்கதுரை
சிவானந்தா



அமரர் நோயல்
ஹரோன்சன்
பொன்னையா



அமரர் நோயல்
மரீன்ட் அல்பிரட்

உறவுகளாய் வாழ்ந்து
உணர்வுகளாய் – எம்முள்
வாழ்ந்து கொண்டிருக்கும்
இலட்சிய ஆன்மாக்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் உள்ளத்திலிருந்து...

எதிர்காலத்தின் நன்மை கருதி எம் மூத்த சகோதரர்களால் 1998ல் விதைக்கப்பட்ட இணைப்புப்பாலம் ஆனது இன்று ஆல் போல் தளைத்து அதன் விழுதுகள் பரப்பி தன் தார்மீகக்கடமைகளை செவ்வனே செய்து அதன் 18வது ஆண்டில் கால் பதிக்கிறது. அவ்வகையில் இதன் அங்கமான கட்டடப்பொருளியலாளன் இதழ்-18 ஊடாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி.

கடல் கடந்து சர்வதேசம் எங்கும் வியாபித்து இருக்கும் எம்மவர்களை ஒன்றிணைக்கும் முகமாக வருடம்தோறும் நடைபெறும் இணைப்புப்பாலம் நிகழ்வும் அந்நிகழ்வில் வெளியிடப்படும் இவ் கட்டடப்பொருளியலாளன் இதழும் எமக்கே உரிய எமது கலாச்சாரத்தை எம் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்து இயம்புவதாக உள்ளது.

தொழில்துறையினரின் அனுபவங்களையும், இளநிலை பட்டதாரி மாணவர்களின் எழுத்து ஆக்கங்களையும் சுமந்து இன்று இணைப்புப்பாலம் இதழ்-18 ஆக உங்கள் கைகளில் தவழ்கிறது.இதற்கு வலுச்சேர்க்கும் முகமாக உடன் தோள் நின்ற அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் உளமார்ந்த நன்றிகளுடன் இனிவரும் காலங்களில் இதன் பயணங்கள் இன்னும் பசுமையானதாகவும் செழிப்பாகவும் அமைய இறைவனை வேண்டி விடைபெறுகிறேன்.

நன்றி.

பரமநாதன் நர்த்தனன்
தலைவர்
இணைப்புப்பாலம்-18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களிடமிருந்து...

அன்பின் உறவுகளே!

அடித்தளமிட்டவர்களையும், அதை வழி கொண்டு நடந்தவர்களையும், தற்போது நடப்பவர்களையும் இணைக்கும் இவ் வருடாந்த வெளியீடு "கட்டடப்பொருளியலாளன்" 18வது முறையாக உங்கள் அனைவரையும் சந்திக்கின்றது.

எமது உறவுகளின் பல்வேறுபட்ட கலை, இலக்கிய அவாவை எடுத்தியம்பும் இந்தப் பாலமானது எமது வழிகாட்டிகளான சிரேஷ்ட மாணவர்களின் தரமான படைப்புக்களை இம்முறையும் ஏந்தியுள்ளது.

அழுத்தமான படைப்புக்களை அளித்த உவகையுடன் ஆக்கங்களை அள்ளித் தந்த உறவுகளுக்கும், இதழை இணைத்திட ஊக்கமளித்த அன்புள்ளங்களுக்கும் நன்றி பகிர்கின்றோம். இனணப்புப்பாலம் தாங்கி வரும் ஆக்கப் பிழை, நிறை, குறைகளை எடுத்தியம்புவதன் மூலம் இனி வரும் எமது உறவுகளின் இம் முயற்சியானது மென்மேலும் மெருகூட்டப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

நன்றி.

அன்புடன்
இதழாசிரியர் குழு
இணைப்புப்பாலம் - 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டை இயம்புவது...


கட்டட பொருளியலாளனாய்
எமது வீச்சத்தின்
பரிணாம எல்லைகளூடே
கலாச்சார கட்டுமானங்களை
கணிய அளவையியலின்
துணை கொண்டு நிறுவும்
புதுமைகாண் சிந்தனை வெளிப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கட்டடப்பொருளியலாளனின் சுவடுகள்...












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNITED STEEL

**Importers & General Hardware Merchants**



No.189/A,
Mahavidyalaya Mawatha,
Colombo 13.
Tel : 011-2439989
: 011-2438479
Fax: 011-2472053

E-mail : unitedsteel189@icloud.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Presidents & Secretaries of Inaipuppaalam

| Year | President | Secretary |
|---|---|---|
| 1998 | P.Samsanthakumar | P.Sithrathevi |
| 1999 | K.Aravinthan | M.I.M.Farshan |
| 2000 | M.Yasotharan | K.Imtiyaas |
| 2001 | P.Mithulakaran | S.Nagulan |
| 2002 | S.Sivapalan | N.Santharuban |
| 2003 | Joseph Jude | S.Thayaparan |
| 2004 | K.Sureshkumar | O.Sasikaran |
| 2005 | K.Piratheepan | V.Nanthagopan |
| 2006 | T.Kugathas | V.Partheepan |
| 2007 | S.Suthan | S.Kowsikan |
| 2008 | Y.Sumithiran | K.Rajeev |
| 2009 | S.Kumaresan | S.Sivananthan |
| 2010 | K.Mayutan | A.G.J.Roshan |
| 2011 | S.Sivashanghar | S.Mugunthan |
| 2012 | S.Tishaban | R.Kobinath |
| 2013 | S.Sivakumaran | G.Karnan |
| 2014 | T.Vakeesan | S.Arun |
| 2015 | P.Narththanan | M.Soumiyaraj |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Complements from

Ambika

Dispensary

Kandy road,
Chavakachcheri.

call us

0779133757

Since 1954...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை நெருடும் நினைவுகள்

துள்ளித் திரிந்த
பள்ளிப் பருவத்தில்
பக்கத்து வீட்டு
பனையோலை வேலியை
பக்குவமாய் தூக்கி
பாதை அமைத்தோம்
பகலிரவு பாராது
பயணங்கள் செய்தோம்
வேப்பமர நிழலில்
மண்சோறு மட்டுமன்றி
நிஜ சோறும் சமைத்தோம்
பொந்தில் வசித்த
குஞ்சு கிளி பிடித்து
கூடுகட்டி வளர்த்தோம்
வெட்ட வெளியிலே
சிட்டென பறந்து
பட்டங்கள் விட்டோம்
காவோலை விழ
கூட்டோடு குஞ்சு விழ
குய்யோ முறையோ என கூக்குரலிட்டோம்
தூர பறக்கும்
இலவம் பஞ்சை
துரத்தி பிடித்தோம்
மாரி பொழிந்தென்ன
மழை வெள்ளம் வந்தென்ன
வாரீர் விளையாட என்று
பனங்குற்றி மீதேறி
படகு விடுவோம்
கைக்குத்தரிசியும் கருவாடும் தின்றோம்
பனடோல் கூட நாம்
பகட்டுக்கும் போட்டதில்லை
முக்காடு போட்டு
மூடி மறைக்காது
வாதங்கள் செய்தோம்
வாய் நிறைய சண்டையிட்டோம்
வலியே இல்லாது
கண்ணயர்ந்த காலம் அது
வம்பு தும்பு செய்தாலும்
வரம்பில்லா அன்பினால் வாழ்ந்தோம்
அய்யோ! எம் வாழ்வில்
அதுவன்றோ பொற்காலம்.

தக்ஷா தேவராசா
மட்டம் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணம்

காலங்களாலும் தூரங்களாலும் கடந்து போகின்றன பயணங்கள். என்ன இது? தத்துவமாயோ தர்க்கமாயோ அமையும் எனக் குழம்ப வேண்டாம். ஓர் அனுபவப் பகிர்வாய், நினைவூட்டலாய் அமையும். அலுப்புத் தட்டினால் மன்னிக்கவும். அடுத்த பக்கத்தை புரட்டுங்கள்.

ஒருவனுக்கோ ஒருத்திக்கோ தாய் மடியிலும் தந்தையின் தோளிலும் பயணங்கள் ஆரம்பிச்சிடும். எனக்கு நிச்சயமாய் நினைவில்லை. பார்த்தது பார்த்து இப்படித்தான் எண்டு நினைக்கிறன். பின் தள்ளுவண்டி, சைக்கிள், பேரூந்து என ஒவ்வொரு பருவங்களிலும் வாகனங்கள், பயணங்கள் மாறிப்போய்விடுகின்றன. ஒவ்வொன்றாய் கடந்து வந்திருப்போம். ஒவ்வொரு பயணங்களும் ஒவ்வொரு சுகம் ஒவ்வொரு அனுபவம்.

1997 இல் அக்கா nursery போகேக்க அடம்பிடிச்சது. 1998இல் nursery க்கு போகத் தொடங்கினேன். 40 நிமிட சைக்கிள் பயணம். இன்றைய கார்பெட் ரோடு இல்லை. தார் ரோடு. ஒருபுறம் பனைமரக்காடுகள் வயல்வெளிகள் மறுபுறம். அப்பாண்ட ஹீரோ சைக்கிள்ள எப்பவுமே அக்கா முன்னுக்கு. பின்னுக்கு நான். மதியம் வீட்டவரேக்க பலதரம் சைக்கிள் சில்லுக்க காலை விட்டதும் அழுததும் அப்பாட்டை பேச்சு வேண்டினதும் இப்பவும் மறக்கல. ஏனோ தெரியல கஷ்டப்படதெல்லாம் மறக்க மாட்டேங்குது. (பல்கலைக்கழகம் முதலாம் வருடம்).

2000 ஆம் ஆண்டு இடப்பெயர்வு. அம்மாவினது ஊரில இருந்து அப்பாவினது ஊருக்கு. யுத்தத்தின் வலிகள், இழப்புக்கள், கொடூரங்கள் புரியாத வயது காரணமாக அவை எனக்கு தெரியவில்லை. அப்பாண்ட ஊரில வீட்டுக்கு பக்கத்தில பள்ளிக்கூடம். 15 நிமிடம் போதும். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விசேட வகுப்புக்கள் காலை 6.00 மணிக்கு. நாலு நாலரை அடி உயரம் இருப்பன். அப்பாண்ட ஹீரோ சைக்கிள் பெரிசு. அந்த வகுப்புக்கு அந்த சைக்கிள்ள போறது அலாதி பிரியம் எனக்கு. வாத்திமாரிண்ட சைக்கிள விடவும் பெரிசு. நண்பர்கள் புது சைக்கிள்கள் வைத்திருந்தும் புது சைக்கிள் வேண்ட சொல்லி வீட்ட கேக்கல.

6 ஆம் வகுப்பு town பள்ளிக்கூடத்திற்கு போனாச்சு. புதுப் பயணம். இப்போ நினைக்கேக்க சிரிப்பு வருது. முதல் இரண்டு நாள் ஊரில இருந்து 769 இலக்க பேருந்தில ஏத்திவிட்டுட்டு பின்னால motorcycle ல பள்ளிக்கூடம் வரை வந்திருக்கார் என் அப்பா. பெல் அடிச்சு டிரைவரை கடுப்பேத்தினதும் அடுத்த ஹோல்ட்ல கொண்டுபோய் இறக்கி விட்டதும், வெள்ளை நிற நீள காற்சட்டை போட்ட அண்ணாக்களிட்ட குட்டுப்பட்டதும் (வெள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

trouser ஐ ஊத்தையாக்கினதுக்கு) நடந்தது. எங்கட super seniors ஐ நீல காற்சட்டையோட கண்டதையும் குறிப்பிடேயாகானும். (அப்ப இவங்க எல்லாம் super senior ஆவனுக எண்டு சத்தியமாய் தெரியாது).

8, 9 ஆம் வகுப்புகள். கோவிலுக்கு போறதில ஒரு நாட்டம். சின்னமாமி தந்த ஒரு சைக்கிள்ளதான் அங்க போறது. சைக்கிளக்கு பூட்டு போடுறது இல்லை. கடவுள் எல்லாத்தையும் கப்பத்துவார் எண்டு. கடவுள் மீது பயங்கர நம்பிக்கை. அந்த சைக்கிள தொலைச்சது கோயில்லதான். அப்ப பயந்த பயம் அப்பப்பா. ஆனா பாருங்க அந்த கடவுள் எனக்கு ஒரு புது Gents' சைக்கிள் கிடைக்கனும் என்று திட்டம் பண்ணியிருந்தார். அதன்பிறகு எப்பவும் சைக்கிள் நிப்பாட்டின பிறகு பூட்டு பூட்ட மறக்கிறது இல்லை.

A/L முழுக்க சைக்கிள் தான். பாடசாலை, ரியூஷன் என இரண்டு வாழ்க்கை. நண்பர் குழாமுடன் புது றோட்டுகள் கண்டுபிடிக்கிறது, கொஞ்சமாய் படிக்கிற பிள்ளைகள் வீட்டைக் கண்டுபிடிக்கிறது, நண்பனுக்காக அவன்ட ஆளுக்கு பின்னால அவன் போகேக்க அவனோட கூடப்போறது என பாதைகள் மாறிப்போனது. களிப்புக்கள் கூடிப்போனது. பயணத்தில அடுத்த அத்தியாயம் பல்கலைக்கழகம்.

பல்கலைக்கழகம் தான் எனக்கு நீண்டதூர பயண அனுபவத்தை தந்தது. நீண்ட தூர முழு சொகுசு பேரூந்து, அரை சொகுசு பேருந்து, புகையிரதம் என தடங்கள் மாறிப்போனது. புகையிரத தனிமைப்பயணங்கள் என்னைப்பற்றிய அலசலுக்கு வழிகோலியது. ஓ சுயபுராணம் படிக்கிறேனா? சரி விடுவம். வீட்டிலிருந்து பல்கலைகழகத்திற்கு பயணமாகேக்க ஒரு பாரம், ஒரு கஷ்டம், ஒரு stress, இனம்புரியாத எதோ மனதில் ஏறிக்கொள்ளும். ஆனா பல்கலைக்கழகத்திலிருந்து வீட்ட போகேக்க, ஆகா! என்ன ஒரு பரபரப்பு, குதுகலிப்பு. இதெல்லாம் ஒரு வருசம் கழிஞ்சாப்பிறகும். பல்கலைக்கழகத்தில் முதல் வருடம் விடுமுறைக்கு வீட்ட போனது பேரூந்தில. NCG. நாங்க 14 பேர். பேரூந்தில எங்களுக்கு பின்னுக்கு எங்கட சூப்பர் சீனியர்கள். பயத்தோட தொடங்கிய பயணம் மறக்க முடியா நினைவுகளாய். அந்த பயணத்திற்கான பயம், plan தான் மறக்காததற்கு காரணம்.

இப்பிடி பல பயணங்கள் போயிருப்பம். சிலதுகள் எழுதல. இதே மாதிரி உங்கட பயணங்கள் சுகமனதாயும் மறக்க முடியாததாயும் இருந்திருக்கும். ஒரு முறை உங்கள் வாழ்க்கையில் பின்னோக்கி பாருங்க. அப் பயணங்களின் நினைவுகளால் ஒரு அமைதி வியப்பு சந்தோசம் மனதினில் எட்டிப்பாக்கும்.

**சந்திரமோகன் அருண்**
**மட்டம் - 2**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டமரத்துப் பசுங்கிளி

அதோ அந்த பட்டமரத்தில்
ஒரு கிளி
அது ஏன் அந்த மரத்தில்
இன்னும்...

இலைகள் இல்லை...
அந்த கிளிக்கு வசதியான
கனிகளும் இல்லை...
வாழிடத்திற்கான வழியுமில்லை...
இருந்தாலும்...
அந்த மரத்தைவிட்டு
கிளி
அந்தப் பசுங்கிளி
இன்னும் பறக்கவில்லை.

அந்த மரம் நன்றாக இருக்கும் போதே
அதை நம்பி
வந்து விட்டது அந்த கிளி
அது தான்
பட்டாலும் செத்தாலும்
அதிலேயே இருக்கின்றது

நன்றாயிருந்த மரம்
தானாகவே மேலொட்டியை
வளர்விட்டது.
பட்டு நிற்கிறது
தன்னை நம்பி வந்த
கிளி பற்றி கவலை இல்லை
அது சரி...
தன்னை பற்றியே
கவலையில்லை
பிறகெப்படி
தன்னை நம்பி
வந்த கிளியைப்
பற்றி கவலைப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிக்கு தெரியும்
இனி பசுமை வராதென்பது
இருந்தாலும் வாழ்கின்றது
நம்பி வந்த பாவத்திற்காக

இந்த கிளியை போலத்தான்
இந்த மரத்தை போலத்தான்


நம் வாழ்க்கையிலும்
எத்தனை பட்டமரங்கள்
அதை நம்பித்தான்
எத்தனை கிளிகள்...!

ராமநாதன் தனுசன்ராஜ்
மட்டம் மூன்று






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அம்மாக்கு ஒரு மடல்....

இருள் பார்த்துப்...
பயந்த என்னைச்...
சமரசம் பேசிப்
போக்குக் காட்டி...
நெஞ்சோடு
அணைக்கவில்லை நீ...

விளையாடித் திரிந்த
என்னை...
விரட்டிப் பிடித்து...
முகம் கழுவிச் சீவிப்
பூச்சூடி...
அழகு பாக்கவில்லை நீ...

பசியோடு நானிருக்க...
கைச் சோறு பிடிப்
பிசைந்து...
உணவூட்டி வாய் துடைத்துக்...
கன்னத்தில் முத்தம்
வைக்கவில்லை நீ...

நடுச்சாம வேளையில்...
கடுங்கனவு நான்
கண்டு...
முழிச்சிருந்து
அழுதபோது...
மார் தட்டி என்னை
மதிசாய வைக்கவில்லை
நீ...

ஊரோடு ஊர் கூடி
எனக்கு....
சடங்கோடு
சம்பிரதாயம்...
வயதோடு வாய்த்த
போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னருகில்
வாய்க்கவில்லை நீ...

மனஞ்சோர்ந்து
பாயினில...
நோயுற்று
கிடைக்கையில...
நோவோடு என்னைரா
பகல் விழித்திருந்து...,
கண்ணோடு கண்
வைக்கவில்லை நீ....

தன்னந் தனியே...
எனக்கும் என்
கண்ணீருக்கும்...
என் தலையணை தந்த
ஆறுதல் கூட...
மறந்தாயே அம்மா
நீ.....எனக்கு....

என்னை நீ கருவறை
சுமந்ததோடு சரி...
தினந்தினம் உன்னை
உள்ளத்தில் சுமந்து...
வலிகளைப்
பொறுப்பதன்றோ....
நான்தானே...தாயே...!

ம் ம் ம்.....
இருக்கட்டும் அம்மா....
இங்கு இன்னுமொரு
ஜென்மம் போதும்.....
உன்னோடு ஆயிரம்
வருடம் மட்டும்
வாழ்வதற்கு.....!

ஆரணி தம்பிராஜா
மட்டம் நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாத கல்வெட்டுக்கள்

துள்ளித் திரிந்த காலம்
கள்ளம் இல்லா உள்ளம்
சிரிப்பை தவிர துயரம்
அறியா பருவம்
பல கனவுகளுடனே தொடங்கியது
பள்ளி காலம்...........

பழக்கப்படாத சூழல்
புதிதாய்த் தோன்றிய நட்புகளுடனே
இனிமையான பயணங்கள்
மயிலிறகுக்கான சண்டையில்
மனசுடைந்த சம்பவங்கள்
பல மாதங்கள் நீடித்த கதைகளும் உண்டு

காலங்களுடனே கனவுகளும் மாறின
பள்ளி கால குறும்புகளும்
அதற்காக வாங்கிய அடிகளும்
அன்று அது வலித்தாலும்
இன்றும் நினைக்கையில்
இதழ் ஓரம் அரும்புகிறது புன்னகை

காலங்கள் செல்ல
அரும்பும் மீசையுடனே அரும்பிய முதல் காதலும்
அதற்காக செய்த சேட்டைகளும்
எத்தனை காதல் செய்தாலும்
ஒரு நாளும் மறவாது

சொந்த உறவுகளை விட
நண்பனே உறவென்று இருந்த காலம்
நான் என்பதை விட
நாம் என்ற வார்த்தையின்
முக்கியதுவத்தை உணர்ந்த காலம்

காலங்கள் பல கடந்தாலும்
நினைவுகள் இன்னும் அகலவில்லை
ஏங்குகிறேன் மீண்டும் அந்த வாழ்க்கைக்காக
முடிந்த பின் ஏங்குவது மனித இயல்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மட்டும் என்ன விதி விலக்கா?????

எல்லா நினைவுகளும் என் மனதில்
அழியாத கல்வெட்டாய்
என்றும் நிலைத்திருக்கும்
மீண்டும் சில கனவுகளுடனே
பல்கலைகழக வாழ்க்கை
புதியதொரு அழியாத கல்வெட்டிற்கான
அடுத்த அத்தியாயம்...

இரவீந்திரன் கஜனன்
மட்டம் இரண்டு

## QS TidBits

* The management contractor only bids to supply management expertise, although sometimes they can also supply the labour to carry out the so-called builder's work in connection with services, as this work package can be difficult to organise.

* Prime contracting is a long-term contracting relationship, based on partnering principles.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய தமிழ்மொழி பேசும் தமிழர்களின் பண்பறியா நிலை

இப்பிரபஞ்சத்தில் முதன்முதலாக தோன்றிய மொழியாம் செம்மொழியான நம் தமிழ்மொழி, பண்டைய ஆறுவகையான நாகரீகங்களில் மிகவும் முக்கியமானதும் தொன்மையானதுமான நாகரீகமாம் நம் தமிழர் நாகரீகம். விஞ்ஞான உலகில் தற்போதைய காலகட்டத்தில் புதிது புதிதாக கண்டுபிடிக்கப்படும் அற்புதங்களில் பலவற்றை பல ஆயிரமாண்டுகளுக்கு முன்னதாகவே கண்டறிந்துவிட்டனராம் நம் தமிழ் மூதாதையர்கள், மருத்துவத்துறையும் கலைத்துறையும் அளப்பரிய சாதனைகளை கடந்துசெல்ல வித்திட்டவனும் நம் தமிழனே என அடுக்கடுக்காக என் தமிழ்மொழியின் பெருமையையும் என் மூதாதையர்களின் அறிவையும் எண்ணி நானும் ஒரு தமிழனே என ஒருபுறம் தலைநிமிர்ந்து இப்பூமியில் தினம் தினம் தடம்பதிக்கையில், மறுபுறமோ நானும் ஒரு தமிழன் என வெட்கித் தலைகுனிந்து நிற்கிறேன் நம் தமிழர்களிடையே காணப்படும் ஒரு சில தீய பண்புகளைக்கண்டு.

தமிழர்களிடையே காணப்படும் தீய பண்புகள் என்றதும் தமிழர்களுக்கிடையிலான ஜாதி பேத வேறுபாட்டைப்பற்றியோ, போட்டி பொறாமைகளைப் பற்றியோ அல்லது கலாச்சார சீரழிவுகளைப் பற்றியோ நான் இங்கு அலச முயலவில்லை. மாறாக சிறியோர் முதல் சான்றோர் வரை நம் தமிழர்கள் தம் இயல்பு வாழ்க்கையில் தன்னையறிந்தோ அறியாமலோ பின்பற்றத்தவறும் மிகவும் எளிய பண்புகளைப் பற்றியே அலச விரும்பிகின்றேன். ஆமாம் எனது 25 வருட வாழ்க்கை அனுபவத்தில் நானும் ஒரு தமிழன் என எண்ணி என்னைப் பலமுறை தலைகுனிய வைத்த பல கசப்பான விடயங்களைப் பற்றி உங்களிடம் பகிர்ந்தாலாவது இச்சம்பவங்கள் சற்றாவது குறையும் என்ற சிறு நம்பிக்கையுடன் தொடர்கிறேன் எனது மனக்குமுறலை.

பொது இடங்களில் கடைப்பிடிக்கவேண்டிய பல பண்புகளை கடைப்பிடிக்கத் தவறுகிறான் தமிழன். தமிழர்கள் நால்வர் ஒன்றிணைந்து பொது இடங்களில் உணவருந்திய பின்போ அல்லது ஐஸ்கிறீம் யோகட் போன்ற சிறு ஆகாரவகைகளை உண்டபின்போ அவ்விடத்தை சுத்தம் செய்ய தவறுவதுடன் மட்டுமன்றி குப்பைத்தொட்டியில் போடவேண்டியவற்றை அவ்விடத்திலேயே சர்வசாதாரணமாக விட்டுவிட்டு தனக்கென்ன வந்தது என்று அவ்விடத்தைவிட்டு வெளியேறிவிடுவர் பெரும்பாலான தமிழர்கள். அதிலொருவர் அவர் சாப்பிட்ட இடத்தை துப்பரவு செய்துவிட்டு குப்பைத்தொட்டியில் உரியவற்றைப் போடுவதை பார்த்து தாமும் அப்படியே செய்யவேண்டும் என முன்வருபவர்களைப் பார்க்கிலும் அவர் துப்பரவாக்கவில்லை ஆகவே நாமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K.M.T

K.M.T TRADE CENTRE

GENERAL MERCHANTS

22,24 ST.JHON'S ROAD, COLOMBO -11
(+94) 112447718
(+94) 112342020
RETAIL : (+94) 114378830

Best complements from...





மணி ஜூவெல்லர்ஸ்
Mani Jewellers



கச்சாய் வீதி, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பரவு செய்யதேவையில்லை என நினைப்பவர்களின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கின்றது என நினைக்கும் போது வேடிக்கையாகத்தான் உள்ளது. எவ்வினத்தைச் சேர்ந்தவனாயினும் இப்பழக்கம் காணப்படுவது சகஜமெனினும் அதில் 90 சதவீதமான பங்களிப்பை தமிழனே செலுத்துகிறான் என்றால் அது மறுக்கப்படமுடியாத உண்மை. இவையெல்லாவற்றிற்கும் மேலாக தமிழனுக்கும் ஆங்கிலேயனுக்கும் இடையிலான ஒரு மிகப்பெரிய வேறுபாடு என்னை கேலிக்கையாக சிரிக்கும்படி தூண்டுகிறது. "இவ்விடத்தில் குப்பை போடவேண்டாம்" என்று வாசகத்தில் போடப்பட்டிருப்பதை அப்படியே கடைப்பிடிக்கிறான் ஆங்கிலேயன்.

பேரூந்துகளிலும் புகையிரதங்களிலும் பயணிக்கும் தமிழன் பற்றுச்சீட்டு எடுக்காமல் பயணிப்பதையெண்ணி போலித்தனமான சந்தோசத்தை அடைகிறான். ஆனால், அவனோ பிடிபட்டு திக்கி திணறி நால்வரின் முன்னிலையில் தலைகுனிந்து நிற்கையில் அங்கு அவமானப்படுவது அவன் மட்டுமல்ல, அவனின் இனமும் தான் என்பதை உணர மறுக்கிறான். அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயருவதற்கு எதிராக கோஷமிடும் இவன், அதற்கு இவனும் ஒரு காரணமென ஏற்க தவறுகிறான்.
படித்தவனாயிருந்தாலும் பணக்காரனாக இருந்தாலும் கடைகளில் பொருட்கள் வாங்க செல்லும் போது ஓரிரண்டை களவெடுப்பதை பொழுதுபோக்காக கொண்டுள்ளனர் நம்மில் பலர். இத்தருணத்தில் நான் சிறுவயதில் கேள்விப்பட்ட சம்பவம் ஒன்று தான் ஞாபகக்கதவை தட்டுகிறது. முன்னைய காலங்களில் மேலைத்தேய நாடுகளில் காணப்படும் கடைகளில் பொறுப்பாக எவரும் இருக்கமாட்டினராம். அங்கு வரும் வாடிக்கையாளர்கள் தமக்குத்தேவையான பொருட்களை எடுத்துவிட்டு உரியபணத்தை உரிய இடத்தில் வைத்துவிட்டு செல்வார்களாம். ஆனால், தமிழன் அங்கு அடியெடுத்து வைத்தவுடனே அப்பழக்கம் முற்றாக மாறிவிட்டதாம். காரணம் தமிழர்களின் திருட்டுப்புத்தி. இன்றும் இதைப்பற்றி நம்மில் பலர் கேலியாகச் சொல்லி நகைப்பினும் அதன் விளைவாக அந்நிய இனத்தவனின் தமிழன் மீதான கண்ணோட்டம் என சற்றும் சிந்தித்ததில்லை.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக எவ்விடங்களிலெல்லாம் அமைதியை கடைப்பிடிக்க வேண்டுமோ, அவ்விடங்களில் எல்லாம் தமிழ்மொழி உரத்துக்கொண்டே தான் இருக்கிறது. அது பொது இடங்களிலுள்ள நூலகங்களாயிருந்தாலென்ன, பல்கலைக்கழக நூலகங்களாயிருந்தாலென்ன இரண்டிலும் ஒரே பிரதிபலிப்பு தான். இவைமட்டுமல்ல, இவற்றைப்போல் எத்தனையோ சிறு சிறு தீயபண்புகள் நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதமான தமிழர்களிடையே காணப்படுவதையொட்டி மீதமுள்ள பத்து சதவீதமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு தமிழனின் வெறுப்பு கலந்த ஒரு வகை சினம் ஊசலாடுகிறதென்றால் அது மிகையாகாது. நீங்கள் எண்ணலாம், "மனிதன் என்ற ரீதியில் இவையெல்லாம் அவனிடத்தில் காணப்படும் சாதாரண தீயபண்புகள் தானே. அதுவும் கீழைத்தேய நாடுகளிலுள்ள மக்களிடம் இது சற்று அதிகமாகவே காணப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் தமிழர்களிடையே காணப்படும் முக்கிய தீய பண்புகளான ஜாதிபேத வேறுபாட்டிற்கு முன்னால் இதெல்லாம் தூசி என்று". ஆனால், உண்மையென்னவென்றால் ஜாதிபேத வேறுபாடு கூட இன்னும் இரண்டே தலைமுறையில் அடியொடு ஒழிக்கப்பட்டுவிடுமென அடித்துக்கூறலாம். ஆனால், இச்சிறு தீயபண்புகள் இன்றும் ஆயிரமாண்டுகளானாலும் தமிழனின் குருதியை விட்டு விலகுமா என்ற சந்தேகம் இருக்கத்தான் செய்கிறது.

ஒரு மனிதன் செய்யும் அளப்பரிய சாதனையால் முதலில் போற்றப்படுபவன் அவனாக இருக்கிறான். பின்னர், அவனின் குடும்பம், சமூகம், நாடு, கண்டம் ஏன் அவனின் இனம் கூட போற்றப்படுகிறது. அதேபோல் அவனிடத்தில் காணப்படும் தீயபண்புகளுக்கும் இது விதிவிலக்கல்ல. ஆகவே தமிழன் தன்னைத்தானே மாற்றிக்கொள்ள மாட்டானா? எவ்வித தயக்கமும் கூச்சமும் இன்றி நானும் தமிழன் என தலைநிமிர்ந்து இவ்வுலகில் ஒரு இறுமாப்புடன் வலம் வரமாட்டோமா? என்று ஏங்கித்தவிக்கும் நெஞ்சங்களில் ஒருவனாகவும், என் இனம் மீதுள்ள அளவுகடந்த பற்றுக் கொண்ட சாதாரண மனிதனாயும் எனது குமுறலுக்கு இங்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்.

**சங்கரசிவம் சஞ்சீவன்**
**மட்டம் நான்கு**

## *QS TidBits*

* The nature of partnering may take several different form depending on the situation and the objectives of the parties involved.
* An essential ingredient in the partnering arrangement is an appropriate dispute resolution procedure, as opposed to an adversarial environment.
* The terms alliancing and partnering do not have the same legal connotations as partnership or joint venture and therefore there has been a tendency, to apply them rather loosely to a whole range of situations many of which clearly have nothing to do with the true ethos of partnering or alliances, which is to be regretted.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலை

நடந்து போகையில்
கடந்திருந்தது ஒரு கல்...
அழைத்தது
கடவுளின் எச்சம் என்று...

கல் எடுத்து சிலை வடித்து...
கருவறையில் சிறையிலிட்டு
கடவுள் என்று சொல்லிட்ட
கல்லின் எச்சம் அது...

ஊர்கொரு குடிலமைத்து
கோவில் என்று பெயருமிட்டு...
அண்டத்தை அடையாளத்துக்குள்
அடக்க நினைத்திட்ட
மடமையின் எச்சம் அது...

இன்னும் சொல்லிற்று...
கடவுள் என்னும் மனிதனின்
பாசாங்கு சொல்லிற்று...
கருவறையில் கன்னியுடன்
காமுறும் கயவர்களை
நம்பும் எம் மடமை சொல்லிற்று...

கொட்டும் காணிக்கை
கோடியில் குறையவில்லை...
நிறையும் பைகள்
எதிலுமே குறைவில்லை...
கடவுளுக்கு முன்னாலே
பங்குகள் பிரிவதாய்
எல்லாம் சொல்லிற்று...

மணி ஒலித்தது
சிரித்தது அந்த கல்...
என்னவென்று வினவினேன்...
கடவுளின் உணவு நேரம் என்றது

மணி அடித்திட உணவு
சிறையிருக்கும் கடவுளுக்கும்...
சொல்லி சிரித்தது...

நீ கூட கடவுள் தான்
உளியின் வலிகளை
பொறுத்துக்கொள்கிறாய்...
என்றேன்... மீண்டும்
மண்ணுக்குள் சென்று
உறங்கிக்கொண்டது...
ஏதும் சொல்லாமல்...

நடராசா பிரதீபன்
மட்டம் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஞ்சனாஸ் புடவையகம்

புடவைத் திணிசுகளின் சங்கமம்





இல.4A, மத்திய சந்தை, சுன்னாகம்.
தொ.பே: 021-2226278


## Ranjanas Tex

Specialist in Sarees & Shalwars

No.4A, CENTRAL MARKET, CHUNNAKAM
TEL : 021-2240278

## Vinmeen Anghady

Dealers in :
- Lanka Kerosene
- "CYPETCO" Agro chemicals (Ceylon Petroleum Cooperation)
- Ceylon Fertilizer Corporation
- Ceramics & Hardware Items
- Paint items - Dulux / Asian etc.



சகலவிதமான மாபிள் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்

No-85889, Main street,
Nelliady,
Karaveddy.

T.P : 021 226 3027




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழைப்பு!

காலை வேளை
பாதித்தூக்கத்தில்
புரண்டிருந்தவன் திடீரென வந்த
தொலைபேசி அழைப்பினால்
தூக்கத்திலேயே கை தொலைபேசியைப்
பற்றிக்கொள்ள
எதிர்முனையில்
'யார் கதைப்பது?'
அழைத்தவர் தான் சொல்லாமல்
என்னைக் கேட்டால்?
இருந்தாலும் கோபம் வரவில்லை...
காரணம்...
அந்த குரலின் இனிமை
ஒரு பெண் தான்.

'அழைத்தவர் தாங்கள் தான்'
சாந்தமாகவே நான்
'மன்னிக்கவும் தவறான அழைப்பு'
அன்றைக்கு, அந்த அழைப்பு
இன்றைக்கு வரைக்கும்
மறுபடியும் வராதா என்று
என் மனதை ஏங்க வைக்கிறது.
குரலுக்கு இத்தனை வசீகரம் என்று
இப்போது தான்
எனக்கு புரிகின்றது.

திருஞானசெல்வம் அர்ச்சுதன்
மட்டம் மூன்று

## QS TidBits

* The traditional structure for project procurement is seen as a sequential method because the employer takes his scheme to an advanced stage with his professional team before appointing a contractor.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











பீடைநாசினிகள், இரசாயன வளமாக்கிகள் உட்பட சகல விவசாய இரசாயன பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் வாங்குவதற்கு நாடவேண்டிய ஒரே இடம்

# Amsawarthan Agro Chemicals shop



பிரதான வீதி
களுதாவளை - 04
மட்டக்களப்பு
தொ.இ - 0778008922
0653652491



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னோடு தொலைத்த நிமிடங்களை ஒவ்வொன்றாய் தேடுகிறேன்...

உன்னோடு தொலைத்த நிமிடங்களை
ஒவ்வொன்றாய் தேடுகின்றேன்
உறங்கும் வேளையில் - எனைத்
தாலாட்ட தேடுகின்றேன்
உதிரும் கண்ணீரில் - உன்
உருவம் காணத் தேடுகின்றேன்

நடக்கும் சாலைகளில் - உன்
நிழல் காணத் தேடுகின்றேன்
உன் நிழலை நிஜமாய் கண்டாலோ
விலகி நிற்க தேடுகின்றேன்
நினைவுகளில் நீ
நிறைந்திருக்கத் தேடுகின்றேன்
நினைவுகளில் நிறைந்திருக்கும் - உன்னை
நிஜமாய் துரத்தி விடவும் தேடுகின்றேன்

உன்னில் முழுதாய்த்
தொலைந்து விடத் தேடுகின்றேன்
உண்மையாய் உன்னை விட்டு
தொலைத்து விடவும் தேடுகின்றேன்
இது முடிவாய் இருந்து விடக்
கூடாது எனத் தேடுகின்றேன்
எல்லாமே முடிந்துவிட்டதோ என
உன்னோடு தொலைத்த நிமிடங்களை
ஒவ்வொன்றாய் தேடுகின்றேன்...

**தட்சாயினி பூலோகநாதன்**
**மட்டம் நான்கு**

## QS TidBits

* Domestic subcontractors do not have a contract with the client but work on site as the main contrac-tor's personnel and they are coordinated by the main contractor's site management team.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Information Technology (IT) usage in Construction Industry

In the current globalized world, information technology is the main part of any kind of works. Information technology is the use of any computers, storage, networking and other physical devices, infrastructure and processes to create, process, store, secure and exchange all forms of electronic data. It is a broad area with all aspects of managing and processing information specially with a large organization or company.

Construction industry encompasses all the businesses relating to buildings, real properties and other infrastructure works including constructing, demolishing, repairing and maintenance. The scope of the Construction industry is broad and it has unique characteristics when compared to the other industries. Construction industry and its outputs are significant part of any economy.

The construction industry is one of the most information-intensive industries. Huge amount of information is generated and consumed by all the professionals. That includes site surveys, cost data, cost analysis, design drawings and layouts, documents , correspondence, faxes, computer files and e-mails. A major construction process requires extensive exchange of data and information between the project participants on a regular basis. During the construction phases and the life cycle of a project industry depends on large amount of information. In the construction industry stakeholders are adopting new trend of technologies to achieve the time, cost and quality objectives. The use of information technology in the Construction Industry is generating new opportunities for collaboration, coordination and information exchange among construction related organizations. The new information technologies and software applications are designed as solutions to specific problems. Important information technology tools and software are identified as follows.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Categories | Usage and Software |
|---|---|
| Computer Aided Design(CAD) | • CAD software widely used by design professionals<br>• AutoCAD has the largest share in CAD market<br>• Microstation, ArchiCAD, Mini CAD, FastCAD are other popular CAD software<br>• CAD tools allows to buildup drawings and allowing editing as well. |
| Building Engineering Applications | •Allows designers to evaluate alterative design solutions in order to reach optimum design. Particularly for complex demands from the clients.<br>1.ATEAN, CARGASW software for climatic energy design<br>2.CALCULUX for lighting and building service design<br>3.CYPE INGENIEROS for structuraldesign<br>4.COSMOS for finite elemental analysis<br>5.DUCTSIZE for electricity and water net designs |
| Computer Aided Cost Estimation | •Allows project managers to make estimations and to keep tract of project spending<br>•Esti-Mate, Manifest, FBS-estimator, PERESTO, GO, ITEC, ARQ are some example for cost estimations software |
| Planning Scheduling and Site Management | •Assists on site managers to plan, evaluate different options and<br>adopt and execute most efficient construction operation in management of human and physical resources.<br>1.Ms Project, Primavera, Power Project to plan and schedule detailed construction activities<br>2.JobMaster, ICON, GEST and Presto Control are used to log and track internal processes during the construction phase |
| Computer Aided Facility Management | •Allows the works related to operation, maintenance and impact of the building operations on the life cycle costs<br>1.Database- holds data from people and their services<br>2.ITE- used to create report of the state of the building |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KRISH LANKA TRADES

**General Commission Agents**

Tel : 011-4325415
: 011-4325416

No. 109 4th cross Street Colombo -11

Mobile : 077-8885853

# COLONIAL ENGINEERING (PVT) LTD

SPECIALIST IN ALL KIND OF PIPES ,VALVES , FITTINGS
& HARDWARE ITEM



138 . Sri Sumanatissa Mawatha, Colombo -12 , SriLanka.

Tel : 2334197 , 2472639-40-41 , 4610545 , 4610302

**Hotline : 4724811, 4724810 ,4724808 , 2387583**

Fax : 4610260

E-mail : coloneng@sltnet.lk Web : www.colonialeng.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Categories | Usage and Software |
|---|---|
| **Business and Information Management** | •Useful to link all kind of intensive data in construction process to achieve easy access and control<br>1.Document management system tool used to comprise the all information throughout construction life cycle.<br>2.Electronic document management systems applications are used to link web based project management systems to improve communications among partners<br>3.Web based project management systems have functionalities like project coordination and scheduling |
| **Cloud Computing** | •Most beneficiary technology that offers increased freedom and easy access to information at any time, from any location such as job sites customer location and satellite offices. |

S.Arunthasa
Second Year




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருண்டுபோனதுஎன் வானம்...

சொல்லடி கொஞ்சம் என்று தான் கெஞ்சுதடி என் உள்ளம்...
செல்லம் என்று சொல்லி கொஞ்சம் காதில் கடி...
இல்லை கோபம் என்றால் கன்னத்தில் அடி...
இது போதும் இந்த இம்சைகள் சுமந்துநான் வாழ்வேன்...!!!

உனைகாணாதபொழுது சிந்திவிழும் கண்ணீரில் தெரியுதடி விம்பம்...
சில்லென்றகாற்றும் சினம் கொள்ளவைக்குதடி...
பால்நிலவின் ஒளியில் பலகதைகள் தூதுவிட்டோம்...
ஏனோமுடிவில் இருண்டுபோனது என் வாழ்க்கைப்பக்கங்கள்
நிரம்பிவிடுகிறது...வலிகள் சுமந்தவலிகளாக...!!!

பரமேஸ்வரன் தர்சன்
மட்டம் - 01

## QS TidBits

* The cost of supervision and general attendance is a normal cost to the main contractor and has always to be calculated and allowed for Nominated sub-contractors may require 'other attendance', and this has to be priced in accordance with the relevant item description in the bill of quantities.

T.Sasikumar
Partner

STS

STS AGENCY

Importers, Exporters, General merchants & Commision Agents

Tel : +94 11 2451036
Mobile : +94 77 666 7543
E-mail : sasikaja2012@gmail.com

No. 118, 4th Cross Street,
Colombo - 11,
Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கையிருந்தால்....

துன்பங்களில் தத்தளிக்கும் மனிதா!
உன் துன்பங்களை கட்டி தூர எறிந்து விடு....
வாழ்வில் நீ உயரவேண்டுமெனில்
உன் மனதில் தன்னம்பிக்கையை விதைத்து விடு......

திட்டமிடு நண்பா!
எடுத்தவுடன் ஏணியின் உச்சியை அடைய எண்ணாதே.....
திட்டங்கள் ஒவ்வொன்றையும் படிமுறைகளாக்கு
ஒவ்வொரு படிகளிலும் உன் கால்தடம் பதியட்டும்
தன்னம்பிக்கையோடு......
நம்பிக்கை தான் கடவுள்
தன்னம்பிக்கை உன்னுள் இருந்தால்
சகாராவிலும் பூக்கள் பூக்கும்

தோல்வியையும் அவமானங்களையும் கண்டு
துவண்டு போகாதே அவற்றை பலமுறை நீ திரும்பிப்பார்...
அவை உன்னைக் கண்டு அஞ்சி ஓடும்
வாழ்வில் வெற்றி அடைந்து விட்டால் போதுமென்று எண்ணாதே....
இன்னும் வெற்றிகள் பல வேண்டுமென்று நினை
தோழனே! வெற்றிகள் பல பெற்றுவிட்டால்
இறுமாப்படையாதே... தலைக்கணம் கொள்ளாதே....
அதுவே உன்னை தலை குனிய வைத்துவிடும்

உன் தன்னம்பிக்கையோடு முயற்சி செய்
கோடி கொடுத்தேனும் கழிந்து போன
ஒரு நிமிடத்தை வாங்கி விட முடியாது....
ஒவ்வொரு நிமிடத்தையும் திட்டமிட்டு பயன்படுத்து.....
உலகச் சரித்திரத்தில் நீயும் கால்தடம் பதித்திடலாம்
உனக்குள் தன்னம்பிக்கையிருந்தால்.....

தங்கவேல் திவாகர்
மட்டம் ஒன்று

## QS TidBits

* Cost control does not stop at tender stage but continues up to the agreement of the final account and the issue of the final certificate for the works.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Who creates and designs our life

What do you all think about the answer? Everybody think that god creates and designs our life . But its not god, its we who create and design our life. Even writing this may be one of my thought in the deep heart and today by writing this thought of me came in to reality.

What you think, .
You become.
What you feel,
You attract.
What you imagine,
You create.
-Gautham Buddha-

We are shaped by our thoughts . Our entire life is guided by our mind. The thoughts we allow to flow in our mind, shape our life and determine our future. Each and every activity that happens in our life is the sum of our daily thoughts.

Watch your thought ,for they become words
Watch your words,for they become actions
Watch your actions ,for they become habits
Watch your Habits ,for they become character
Watch your character ,for they become destiny.
-Margaret Thatcher-

Sometimes things happen in our life may be a part from our knowledge . So we wonder why all these happen to us .But the simple answer is somewhere at sometimes those thoughts have arisen in our mind without our awareness. So we should be aware of our thoughts . While we wander around of our thoughts may flow in our mind but we should know whether the thoughts are positive or negative.

Our positive thought waves always attract to the positive waves in the world and vice versa. So if we think positively all the positive waves in the world will get attracted to us and help us to become more and more positive of our thoughts.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

If we really want to change our life then we should be more aware of our thoughts that flow in our mind . If we do so, surely we can feel the change in our behaviours. Each and every successful person in this world know this secret weapon and they practiced it to become more successful.

Dr.A.P.J.Abdul Kalam dreamt about flying in the sky during his childhood. One day after long time his dream came true .Its because of his thoughts, the world showed him the path to achieve it.When we seriously want something, the world will give us what we want.But we should know what we really want in our life. We should understand this simple secret to attract everything we want towards us and lead our life in the path of sucess.

We should have control over our thoughts. We should mould our thought. We may have positive mind ,but during some situation it may turn into negative, so during that time we should beaware and guide our mind in the positive path. Our surrounding ,our neighbours and also our friends can influence in our thoughts and effect our thoughts . Sometime that may be either positive or negetive effect.

Ther are 5 friends in a batch and one of the girl is very clever and study well. Although they five are good friends the other four get jealous and always think to make the clever girl down. During exams the clever girl failed in all the subjects.

So if we are with some bad friends we should not allow their negative thoughts to over rule our positive thoughts and we should over rule their thoughts and make them to feel positive.

Its we who create and design our life

What do we want in our life?
What do we want to become?
What do we want to achieve?

We should plan our future and go towards it. Then the world will definetly make path for it.

Sayine Soujanya Mahendran
Level Three



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம்

ஐயறிவு மிருகத்தினின்றும்
ஆறறிவு மனிதனை
பிரித்தறியும் பகுத்தறிவு வழி நடக்க வைப்பது
மனிதநேயம்.

மனிதனை மனிதன் நேசிப்பதும்.
மனம் விரும்பிச் சேவைகள் செய்வதும்
மனிதர்க்கு தீங்கிழைக்காமையும்
மனித நேயத்தின் மான்புறு இயல்புகளாம்.

உடுக்கை இழந்தவன் கைபோன்று அங்கு
இடுக்கண் களைவதும்.
உற்றோரை மதித்து அத்தோடு
மற்றோரை போற்றுதலும் மனிதநேயமே.

ஏற்றிவிட்ட ஏணிப்படிகளினை
எள்ளி நகையாடாமல்
என்றும் நினைத்து போற்றி நடந்திடல்
இனிதான மனிதநேயம்.

உடமையை இழந்து
கடமையை கைவிட்டோர்தமை
மடமையற்று மதிகொண்டு
மன்னித்தருளல் மனிதநேயம்.

தக்ஷா தேவராசா
மட்டம் ஒன்று

## QS TidBids

* Cost analysis provides data for comparisons to be made between the costs of various building functions in one project with that of equivalent functions in other projects.
* The pricing schedule is simply a schedule in which the contractor inserts preliminary costs relating to the employer's requirements, and all contractor cost items (including management and staff, site accommodation, services and facilities, mechanical plant, and temporary works items).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமானம்

சந்திப்பு நடந்து கொண்டிருந்த அறைக்குள் அவசர அவசரமாக நுழைகிறார் அந்த பத்திரிக்கையின் இதழாசிரியர். "விகாரமாதேவி பார்க்குக்கு பக்கத்திலை இன்றைக்கும் ஒரு ஜோடியை வாகனம் ஏத்தி கொன்றிருக்காங்க..." என்று பதறிக்கொண்டு கூறினார் சாந்தகுமார். அங்கே கூடியிருந்த தலைமை போலிஸ் அதிகாரி மோகன் விசயத்தை கேட்டுவிட்டு மந்திரபுன்னகை புரிந்தார். பத்திரிக்கையின் நிறுவுனரும் மற்ற போலிஸ் அதிகாரி சுபா இருவரும் ஒருவரை ஒருவர் பீதியுடன் பார்த்துகொண்டனர்.

இந்த இடத்தில் நாட்டிற்கு நல்லது செய்யும் ஒரே நோக்கத்துடன் வெவ்வேறு திசையில் சென்று கொண்டிருக்க வேண்டிய நான்கு பேரையும் ஓரிடத்திற்கு கொண்டுவந்தது ஆறு இரட்டை சாவு. அதுவும் சரியாக ஆறு மாத காலத்தில் மாதத்திற்கு ஒன்றாக தான் நிகழ்ந்தது. இந்த இறப்புக்களின் சிறப்பு என்னவென்றால் ஆறும் காதல் ஜோடிகள். இதை ஊரறிய செய்தது கொலையாளி பத்திரிக்கைக்கு எழுதிய ஆறு கடிதங்கள். ஊரறிய 108 அனுமானங்கள் இந்த வழக்கை முடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளியது.

அரசியல் தலையீடு ஓய்வு பெற்ற போலிஸ் அதிகாரி மோகன் மற்றும் மோகனை ஆஸ்தான குருவாக கொண்ட போலிஸ் அதிகாரி சுபா இருவரையும் நியமித்தது. வந்த கடிதங்கள் யாவும் ஒரே பத்திரிக்கைக்கே வந்ததாலும் அந்த பத்திரிக்கையிலேயே முதல் விசாரணை இன்று தொடங்கியது. மோகனின் இந்த அணுகுமுறையை பார்த்து சுபா வியந்தான். ஆனால், மோகனின் முதல் மற்றும் கடைசி விசாரணையை இன்றே இந்த இடத்திலேயே முடித்து விட உள்ளார் என்பது தெரிந்திருக்கவில்லை.

மந்திரப்புன்னகை சற்றே ஓய, "இன்று நடந்த இரட்டை கொலையோடு இன்னும் இரண்டு நாளில் அடுத்த கடிதம் வர போகிறது. ஆனால் அதற்குள்ளேயே வழக்கு முடிய போகிறது." என்று கூறினார் மோகன். எல்லா கடிதங்களையும் வாசித்து பார்த்தேன். குற்றவாளி ஒரு மன நோயாளி. காதல் தோல்வியால் இப்படி செய்து கொண்டிருக்கிறான் என்று நினைக்கிறேன். வீதியில் வைத்து வாகனத்தால் அடித்து விட்டு ஓடுகிறான். ஒவ்வொன்றும் வேறு வேறு வாகனங்கள். பணக்காரனாக இருக்க வேண்டும். கண்டுபிடித்தாலும் செல்வாக்கை பாவித்து வெளியே வந்து விடுவான். அதற்கு பதில் மனநோயாளி ஒருவனை வைத்து வழக்கை முடித்து கொள்கிறேன். எனி எந்த கடிதம் வந்தாலும் பிரசுரிக்க கூடாது. மற்றைய பத்திரிக்கைகளுக்கும் நாங்கள் அறிவித்து கொள்கிறோம். மாதத்திற்கு இரண்டு பேர் அதிகமாக சாவதால் எதுவும் மாறிவிட போவதில்லை. இதை பற்றி விசயம் வெளியில் போனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவை அறிய வேண்டி வரும் என கூறி ஒரு கோபக்கனல் பார்வை ஒன்று பார்த்தார்.

விசாரணையும் முடிந்துவிட்டது வழக்கும் முடிந்துவிட்டது. யாரோ ஒரு அப்பாவி தண்டனையை அனுபவிக்க போகிறான். 108 அனுமானத்தையும் ஒரே ஒரு அனுமானத்தில் ஊதித்தள்ளிய மோகன், வழக்குக்கு சம்பந்தமான தகவல்களை எல்லாம் சேகரித்துக் கொண்டு வருமாறு சுபாவிடம் கூறிவிட்டு கிளம்பிவிட்டார். பத்திரிக்கையின் நிறுவுனரும் மோகனுடன் கிளம்பிவிட்டார். சுபாவிடம் பல்வேறுபட்ட உணர்ச்சிகள் வெளிப்பட்டன. பத்திரிக்கையின் இதழாசிரியர் எதிரில் வர சுதாகரித்து கொண்டார்.

ஒரு நிமிட மௌனத்திற்கு பின் சாந்தகுமார் பேச தொடங்கினார். "நீங்களும் அவரைப்போலவா என்று எனக்கு தெரியல. ஆனால், நான் சில விசயம் சொல்லனும். இந்த ஆறு இறப்பிற்கு பிறகு சரியா ரெண்டு நாள் கழிச்சு தான் கடிதம் வரும். பாவிச்ச வாகனங்கள் எல்லாம் வேறை வேறை. ஆனால், எதுவுமே பணக்காரங்கள் வச்சிருக்கும் வாகனம் இல்லை. ஏன் இதையெல்லாம் அடுத்த நாள் பேப்பர்ல பார்த்திட்டு ஒருத்தன் கடதாசி போட்டிருக்கக்கூடாது. ஒருவேளை அவன் இந்த உலகத்துக்கு ஏதும் சொல்ல வரலாம். இல்லையா?". சுபா சிரித்துக்கொண்டே "அவருக்கு வழக்கை முடிக்கனும். உனக்கு வழக்கை நீட்டி சுவாரஸ்யத்தை கூட்டனும். உங்க முதலாளிக்கு பத்திரிக்கைக்கு பிரச்சனை வரக்கூடாது. வழக்கை முடிக்க சொன்ன அரசியல்வாதிகளுக்கு எலெக்சன் நேரம் குழப்பம் வரக்கூடாது. உங்களுக்கு எது தேவையோ அதையே உங்களை அறியாமல் நம்ப வெளிக்கிட்டுடுவீங்க. ஆனால், உண்மையை பற்றி யாருக்குமே கவலை இல்லை. வாழ்க்கையிலையும் இதையே தான் பண்ணுறோம். எங்களுக்கு நாங்க எப்பவுமே நல்லவங்க தான். ஏனென்றால் மற்றவங்க நிலைமையை நாங்க யோசிக்கிறதே இல்லை. இப்போ நீ சொன்னது 108 அனுமானத்திலை இரண்டாவது அனுமானம். அனுமானத்தை வைச்சே வாழ்ந்துகிட்டு இருக்கீங்க. வாழுங்க. நான் வாறேன்"


செந்தூர்செல்வன் மயூரன்
மட்டம் நான்கு

## *QS TidBids*

* Under lump sum arrangements, the contractor is concerned to be reimbursed its costs. Re-measurement arrangements are less risky for the contractor as they are more or less guaranteed that their cost will be reimbursed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்

நெடும் பனைகள்
நீள் வானை நெருடி நிற்கும்
சுடும் தென்றல்
உள்நெஞ்சை வருடி நிற்கும்
கடும் வெப்ப காலங்கள்
மாறிவரும்
தொடுவானை வசந்தங்கள்
தேடி வரும்
இளம் பூக்கள் தமிழ் பண்பாடு
பேணி வரும்
நிலாச்சோறு வானம்
ஊட்டாமல் ஊட்டி விடும்
உலாப்போக குயில்
பாட்டோடு கூட வரும்
நலம் கேட்க நதி
நாளெல்லாம் பாய்ந்து வரும்
புலம் பெயர்ந்தாலும் பூக்கள்
தமிழ் வாசம் வீசி வரும்
வடக்காக
வங்கக்கடலை முத்தமிடும்
எழில் கொஞ்சும்
ஈழ தேசத்தின் முகாந்திரம்
யாழ்ப்பாணம்
நமது தாய் நிலம்....!

வைதேகி தியாகலிங்கம்
மட்டம் இரண்டு

## QS TidBits

* Tender adjudication takes place after the bills of quantities are priced and usually involves the senior management of the contracting organization who will, among other matters, decide the level of profit required, sometimes referred to as the margin.
* Valuations will be made monthly; however, the Pricing Document provides for a range of payment options based upon interim payments, stage payments, scheduled payments or indeed any other method of payment the parties wish to make.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CITHAMPARAPILLAI
# Book Depot





Dealer's in stationary, printing & term school books, Quality input etc.





Nelliady, Karaveddy. Tel : 021 226 3223


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளைக்காரன்

கொள்ளைக்காரர்கள் எப்படி இருப்பார்கள்?
என்று என்னிடம் கேட்டால்.......
நான் என்னவென்று சொல்வேன்?
மனதைக் கொள்ளையடிக்கும்
பட்டாம் பூச்சிகளைச் சொல்வேனோ.....
அல்லது,
காகத்தின் வடையை திருடிய நரியினைச் சொல்வேனோ?

இந்தக் கேள்வியை நான் வேறு எவரிடமும் கேட்டால்
அவர் என்னவென்று சொல்வார்?
கொள்ளைக்காரர்கள் என் பொருட்களை
திருடிவிட்டு ஓடிவிடுவார்களா?
அப்படித் திருடினாலும் நான் சும்மா விடுவேனா?
துரத்திச்சென்று அவர்களை பிடித்துவிட மாட்டேனா?
உண்மையில் என்னவென்றால்
நான் ஓடுவதையும் கண்டதில்லை
திருடுவதையும் கண்டதில்லை

என் மனதில்.........
கொள்ளைக்காரர்கள் என்றால்,
கோட்டு சூட்டு போட்டுக்கொண்டு
கழுத்துப் பட்டி கட்டிக்கொண்டு
கறுப்புக் கண்ணாடியுடன்
கலக்கலாக......... கபடமாக.......
கொஞ்சம் ரம்மியமாக வருவார்களே....

உண்மை என்னவென்றால்
தூரத்தில் இருப்பவர்கள் மட்டுமா
கொள்ளைக்காரர்கள்?
எம்மோடு பழகும் சகபாடிகள்
ம்..... ம்..... அவர்கள் திருடுவது பணத்தையல்ல
நகைகளை அல்ல வீட்டையுமல்ல
பிறகு என்னத்தை?
ஆம்...... எம் மனதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்,
அதற்கு நாம் கத்துவதில்லை கதறுவதில்லை
கதறும் நேரம், அவர்கள் எங்கள் அருகில் இருப்பதில்லை
பிரிவு என்னும் பெயரில் அவர்கள் பிரிந்தே சென்றிடுவர்
நட்பு எனும் கொள்ளையை நானும் இரசிக்கின்றேன்
இப்போது மட்டுமல்ல என்றென்றும் இரசிப்பேன்

எழில்வாணி பெரியண்ணன்
மட்டம் ஒன்று

## *QS TidBids*

* Arbitration is a private system of dispute resolution with statutory backing that is frequently used as an alternative to litigation in connection with construction disputes, where it is considered desirable that the skills of the decision-maker should be more heavily biased towards relevant technical issues, rather than purely legal issues.

SLT

M.C.M.NAJEEM
Partner
0 777 666 593

SANA LANKA TRADING

Importers, Exporters, General Merchants & Commission Agent

No.228, Keyzer Street,
Colombo 11, Sri Lanka.
Tel : 0112 328297
E-mail : sanalankatrading @gmail.com

SLT



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி நட்பு

கல்லூரியெனும் கருவறையில்
நட்புஎனும் தொப்புள் கொடியால்
காலங்கள் சென்றாலும்
காயங்கள் மறைந்தாலும்
மனம் விட்டுநீங்காதது-எம்
மகிமையான கல்லூரிநட்பு...

நீங்காத நினைவொன்று
நெஞ்சினில் கானம் பாட
எப்போதெல்லாம் எம் நட்பு
மனதினில் வந்து ஆட...

வான் போற்றும் மண் போற்றும்
வானமே நிமிர்ந்துபார்க்கும்
கள்ளமில்லா நட்பிற்குள்ளே
கரைந்துபோக எனக்கும் ஆசை...

கூடவே ஒரு நண்பன் இருந்தான்
குறும்புகள் செய்யத் தோன்றும்
நரம்புகளாக மலரத் தோன்றும்
அப்படியே நட்பிற்குள் மூழ்கத் தோன்றும்...

விவேகம் இடையிடையே
வில்லத் தனமான கோபங்கள்
பலநேரம் பகிர்ந்துகொண்ட
பத்திரமான அனுபவங்கள்...

நட்பு எனும் ஆழ்கடலில்
மூழ்காதவர் யாருமிலர்
மூழ்கியவர்களில் மகிழ்ச்சிமுத்து
எடுக்காதவரும் யாருமிலர்...

எத்தனை உறவுகள் வந்தாலும்
எத்தனை ஜென்மம் தொடர்ந்தாலும்
அத்தனையிலும் சிறந்தது
நட்புஒன்றேஉயர்ந்தது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்மூடி கனவொன்றுநான் காண
ஆனந்தக் கண்ணீர் தான் பொங்க
காரணம் என்னவென்று தேடிப் பார்த்தேன்
கல்லூரிநட்பென்று புரிந்துகொண்டேன்...

நண்பர்களாய் பிணைந்தோம்
நட்புலகைபிரியும் போது
கருத்தரிக்கும் குழந்தைபோல் கதறுகின்றோம்...

மீண்டும் ஓர் பிறப்புண்டோ எனக்கு
மண்டியிட்டுகேட்கின்றேன் இறைவா
கல்லூரி நட்பையும்
கல்லூரி வாழ்வையும்
நீங்காதவரமொன்றுதா...

தாதேயு ரொஷாந்பீரிஸ்
மட்டம் ஒன்று

VS

VINAYAGAR STORES

General Merchants & Commission Agents

No 195, 4th Cross street,
Colombo - 11.

T.P : 2445311
2441685



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடல்....

இருள் சூழ்ந்த தேசத்தில்
இன்னும் தான் காணவில்லை
விடியலின் பிரதிபலிப்பை....!

புயல் சூழ்ந்த தென்றலில்
நானும் தான் தேடவில்லை
பூக்களின் புல்லரிப்பை...!

நீண்டு போன பயணத்தின்
எச்சங்களை
மாண்டு போன மனிதத்தின்
மிச்சங்களை
தேடித்தான் போகவேண்டியிருக்கிறது
தொலை தூரமாய்....!

உறைந்து போன
அரிய தேடலை
உணர்ச்சி ததும்பும்
எழுச்சிப் பாடலை
உரைக்காமலே
அலைக்கழிக்கிறது காலம்...!

வைதேகி தியாகலிங்கம்
மட்டம் இரண்டு

## QS TidBits

* Valuations will be made monthly; however, the Pricing Document provides for a range of payment options based upon interim payments, stage payments, scheduled payments or indeed any other method of payment the parties wish to make.
* A variant of cost-plus contracts, this strategy incentivizes the contractor by offering a bonus for completing the contract below the agreed target cost. Conversely, damages may be applied if the target is exceeded.
* Joint ventures are projects to which both the public and private sectors contribute, but where the private sector has overall control. The project as a whole must make economic sense and competing uses of the resources must be considered.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்காய்...

பலதை பகிர்ந்து
சிலதை தொலைத்து
நினைவை நிறைவாக்க
கனவை சுமந்து - பயணிக்கிறோம்

நான்கு வருடம் - ஆம்
நான்காவது வருடம்
நாவால் உடைந்தாலும்
நாலாக உடையாம் - இன்றும்

விளக்கங்கள் பல உண்டு
விட்டுக்கொடுப்புகள் சில உண்டு
விட்டு விடு என உறுத்தல் தொடர்ந்தாலும்
விட முடியாத உறவு இது

பல்கலை கற்று தேர்ந்தாலும்
பலதையும் பத்தையும் உணர்ந்தாலும்
பற்பல உறவுகள் கிடைத்தாலும்
பாவியாய் மனம் ஏங்கி நிற்குமே - உனக்காய்

இனியா ஸ்ரீஸ்கந்தராஜா
மட்டம் நான்கு

## QS TidBits

* Domestic sub-contractors have a responsibility to deliver work that complies with the approval of the client and architect and are paid by the main contractor from cash received from the client in interim valuations.
* Cost reimbursement contracts – where a contractor is reimbursed on the basis of the prime cost of labour materials and plant plus an agreed percentage addition to cover overheads and profit.
* Lump sum contracts – where the contract sum is known before work starts on site and the contractor agrees to undertake a defined amount of work for a specific amount. This type of contract is often based on a firm bill(s) of quantities and drawings.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொருங்குண்ட இதயம்

வதைகளின் கொடூரத்தையும்
வலிகளின் மொழியையும்
வன்மங்களின் அநீதியையும் தான்
வட்டி சேர்க்கின்றன என் பேனாக்கள்...

நொந்துபோன மெய்யுடன்
நொருங்குண்ட இதயதுடன்
மரணித்துப் போய் கொண்டிருக்கும் - சோகம் நிறைந்த
மக்களின் அவலக் குரலிது.

முட்கம்பி வேலிக்குள்
முடங்கிப் போன நம்மினத்தின்
முகவரியற்ற வாழ்க்கைக்கு
முற்றுப்புள்ளி இட்டார் யாரோ?...

உற்ற உறவுகளைப் பிரிந்து
உடன் பிறப்புக்களை இழந்து
உண்மை நண்பர்கள் சதைப்பிண்டங்களாகி
உருக்குலைந்து போன உறவுகளின் மனங்கள் எப்படி ஆறும்...

கரையேறாத படகுகளில்
கலங்கரை விளக்கைத் தேடி
காத்திருக்கும் உள்ளங்களுக்கு
காலம் தாண்டி சென்று விட்டது என்று...

கண்ணிமைக்கும் நொடிகளுக்குள்
காணாமற் போன உறவுகளை எண்ணி
காயப்பட்ட உடலுடன்
கருகிக் கொண்டிருக்கும் மனங்களை எப்படி ஆற்றுவது...

தினம் தினம் நிகழும்
தீராத வதைகளைக் கண்டு
தித்தித்துச் சிறகடிக்கும் உள்ளங்கள் கூட
திகைத்து போய் விடுகின்றன சில நொடிகளில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள முடியாத துயரில்
மறக்க முடியாத சோகங்களுடன்
மன்றாடிக் கொண்டிருக்கும் உள்ளங்களுக்கு
மறுமலர்ச்சி கொடுக்க இறைவா நீயாவது வருவாயா?.....

தாய் தந்தையை இழ்ந்து
தரணியில் யாருமற்ற அநாதைகளாய்
தவித்து கொண்டிருக்கும் மக்களின்
தவிப்பைத் தாங்கமுடியவில்லை எம்மால்...

இனத்திற்குள் கலவரங்கள்
இல்லதிற்குள் சந்தேகங்கள்
இனந்தெரியா நபர்களின் இச்சைகளால்
இதயங்கள் பல தினம் தினம் குருதியற்று நின்று விடுகின்றன...

மாயம் நிறைந்த உலகில்
மௌனித்த மனங்கள் பல
மௌன இராகம் பாடுகின்றன - மரணிக்கும்
மனங்களில் விடியல் இசை கேட்காதா என்றபடி...

கேசாளினி ஸ்ரீதரன்
மட்டம் இரண்டு

சீரடி புத்தகசாலை



இல.362, பிரதான வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.



SERADI BOOK SHOP

அன்பளிப்பு பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள்
பத்திரிக்கைகள்
போட்டோ பிரதி
கவறிடுதல்



தொ. இல : 021 4923802



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களும் நெறிபிறழ்வுச் செயற்பாடுகளும்

